## தலைப்பு 288 – நில அளவைத் திணைக்களம்

-----------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நில அளவைத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நில அளவைத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 08 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்டு அந் திக் கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கும் கருத்துடன் அன்றி சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெரிந்துகொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) இவ்வறிக்கையின் 1.6.1(இ)(ஈ)(உ), 1.6.2, 1.6.3, 1.6.4(ஆ) பந்திகளில் உள்ளடங்கிய அவதானிப்புக்கள் தொடர்பாக கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த பரிந்துரைகளை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதவச்சி, எம்பிலிப்பிடிய, கருஞ்சிகாடு மற்றும் மாதம்பே ஆகிய பிராந்திய நில அளவை அலுவலகங்கள் மற்றும் கிரிதலே உத்தியோகபூர்வ வாசஸ்தளம் ஆகிய கட்டடங்களின் நிர்மாண வேலைகள் 2018 திசெம்பர் 31 திகதி அளவில் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளவாறு ரூபா 9,764,046 தொகையாகிய நடைமுறை வேலை மீதி 2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைபெறு வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட நிர்மாண வேலைகளின் கூட்டுத்தொகை ரூபா 83,236,331 தொகை எனினும், அப் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்கள் என காட்டப்பட்டிருக்காததுடன், | சுற்றறிக்கையின் 08 பந்தியின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டடங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | முன்னைய ஆண்டின் நடைபெறு வேலை எனக் காட்டப்பட்டிருந்த மேற்கூறிய நடைபெறு வேலை மீதி அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியிலும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பதுளை மற்றும் கிரிதலை பிராந்திய நில அளவை அலுவலகக் கட்டடங்கள் மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு காணப்பட்டதுடன், 2019 திசெம்பர் 31 திகதி அளவில் அச் சொத்துக்களில் ரூபா 36,770,240 தொகையான நடைபெறு வேலைக் கிரயம் நிதிக்கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் 8 பந்தியின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டடங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (இ) | ரூபா 13 மில்லியன் செலவில் பொலன்னறுவை மாவட்ட நில அளவை அலுவலகத்தின் நிர்மாண வேலைகள் 2017 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 2017, 2018 ஆண்டுகளில் மற்றும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 8.5 பந்தியின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டடங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பொலன்னறுவ மாவட்ட நில அளவை அலுவலகம், கட்டடத் திணைக்களத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்காக ரூபா 13 மில்லியனிற்கான ஏற்பாடுகள் கட்டடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2017 ஆண்டின் போது காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சினால் காணி வங்கி செயற்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ரூபா 37.83 மில்லியனிற்கான மடி கனிணிகள் ஒப்டிகல் கேபல், நில அளவை ஸ்கேனர் ஆகிய சொத்துக்கள் 2017, 2018 ஆண்டுகளை போலவே மீளாய்வாண்டிலும் நிதிக்கூற்றுக்களின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 8.5 பந்தியின் பிரகாரம் ஏனைய நிறுவனங்களில் இருந்து வழங்கியிருந்த ஏற்பாடுகள் மீது கொள்வனவு செய்திருந்த சொத்துக்களை உரிய முறையில் கணக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | இந்த சொத்துக்கள் எமது நிறுவனத்தின் இருப்புப் பதிவேடுகளில் உரிய முறையில் உட்படுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இந்த சொத்துக்களை உரித்தாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | மத்திய, வடமத்திய, கிழக்கு, வடமேல் ஆகிய மாகாணங்களில் திணைக்களத்திற்கு சொந்தமான வெற்று நிலங்கள் 1.3139 ஹெக்டயர்களும், அநுராதபுரம் மற்றும் கலேவெல ஆகிய இடங்களில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 காணிகள், பதுளை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் மற்றும் அநுராதபுரம் முன்முகாம் உட்பட தென் மாகாணத்தின் மேலும் 02 கட்டடங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | பிராந்திய ரீதியாக ஒவ்வொரு அலுவலத்தினாலும் வழங்கியிருந்த காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பான தரவுகள் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கியிருந்தது. ஏனைய காணிகள் மற்றும் கட்டடங்கள் எதிர்காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் நிதி அலுவல்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்காக பிணைப் பதிவேடொன்று பேணியிருக்கவில்லை. | நி.பி. 891(1) பிரகாரம் பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். | பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| நாட்டின் பல்வேறு பிரதேசங்களில், நூறு இடங்களில் அமைந்துள்ள ரூபா 5,689 மில்லியன் தொகை என பெறுமதி கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த 49,477 ஹெக்டயரிற்கான காணிகளின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான காணி உறுதிகள் நில அளவை வரைபுகள் மற்றும் காணி வழங்கும் சான்றிதழ்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 76 இடங்களில் அமைந்துள்ள ரூபா 1,009 மில்லியன் தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 666,737 சதுரஅடியைக் கொண்ட திணைக்கள கட்டடங்களின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக அந்த கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த தரைப் பகுதிக்கான காணி உறுதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்தும் ஆவனம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த ஆவனங்களை எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் தாபனக் கோவையின் xxviii அத்தியாயத்தின் பிரிவு 9.1 மற்றும் நில அளவைத் திணைக்களத்தின் நிலையியற் கட்டளையின் | நில அளவைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலக சுவடிக்கூடங்களில் இருந்து நில அளவையாளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த அளவை விடயங்களுக்கு பயன்படுத்தப்படும் 5240 வெளிக்கள புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் | சுவடிக்கூடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு வேலைத் | இது தொடர்பாக இணங்குவதுடன் எதர்காலத்தில் விரிவான பதிலொன்று வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயம் ix பிரிவு 9.1 மற்றும் 2014 ஜனவரி 09 திகதிய 02/2014 இலக்கங் கொண்ட உள்ளக வெளிக்களச் சபை சுற்றறிக்கை | அறிக்கைகள் 2020 ஜூன் 30 திகதி வரை அவ் அலுவலகங்களுக்கு திருப்பி ஒப்படைக்கப்படாதிருந்ததுடன், அத்திகதியில் உள்ளவாறு திருப்பி ஒப்படைக்காமல் தாமதப்படுத்திய காலப் பகுதி 03 மாதங்கள் முதல் 170 மாதங்கள் வரையான வீச்சில் காணப்பட்டது. | திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 880 | திணைக்களத்தின் பணத்திற்கு பொறுப்பாக உள்ள 37 சரப் உத்தியோகத்தர்களிடம் நி.பி. 880 படி பிணைகள் பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் படி பிணை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | தற்போது நிதிக்கு பொறுப்பாக செயற்படுவது வேறு சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்கள் என்பதனால் அந்த உத்தியோகத்தர்களிடம் பிணை பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (இ) | 2009 ஜூன் 17 திகதிய 09/2009(i) இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | திஸ்ஸமஹாராம பிராந்திய நில அளவை அலுவலகத்தின் மீளாய்வாண்டு ஜனவரி முதல் ஜூலை வரை மாத்திரம் உத்தியோகத்தர் / ஊழியர்கள் ஐந்து பேரினால் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் நாளாந்தம் பதிவு செய்திருக்கவில்லை. | அரச சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | மின்சாரத் தடை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இயந்திரங்கள் செயற்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்ததுடன், அவ்வாறான நாட்களில் நாள் வரவு பதிவேட்டில் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் பதிவு பேணப்பட்டு வந்துள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த (ஏசீஏ–3) படிவத்தின் படி கட்டுநிதி பெறுவனவுகளின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுநிதி கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை என முறையே ரூபா 3,947,245,069 தொகை மற்றும் ரூபா 3,931,291,398 தொகை காட்டப்பட்டிருந்தது. அதன்படி, இந்த மீதிகளிடையே வித்தியாசம் ரூபா 15,953,671 தொகை ஆக இருக்க வேண்டிய போதிலும், திறைசேரி ஏடுகளின் படி அந்த மீதி ரூபா 9,218,360 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 6,735,311 ற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. இந்த வித்தியாசத்தை வருட இறுதியில் உள்ள காசு மீதியாக ரூபா 3,068 உடன் கூட்டி வழியில் பணம் என காட்டி பிழையான முறையில் கட்டுநிதி சீராக்கல் கணக்கு சமநிலைப் படுத்தப்பட்டிருந்தது. | வித்தியாசங்களை இனங் கண்டு அவற்றிற்கு தேவையான சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | அரச கணக்கு திணைக்களத்தின் மூலம் New CIGAS WEB Interface ற்கு விடுவித்தலை நாளதுவரை ஆக்கப்பட்டதுடன், அந்த கட்டுநிதிக் கணக்கு மற்றும் தொடர்புடைய மீதிகள் காட்டப்படுவது ஒவ்வொரு மாதமும் வெவ்வேறாகவே ஆகும். அதனால் கட்டுநிதிக்காக மீளாய்வாண்டிற்கான பொழிப்புகள் காட்டப்படுவதில்லை. |

### 2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றின் படி மொத்த வருமான பெறுவனவுகள் என ரூபா 432,574,895 ற்கான வருமானம் ஒன்றை காட்டப்பட்டிருந்த போதிலும், கணினி அச்சுக் குறிப்பின் படி காட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா 432,271,585 தொகை ஆகும். இதன்படி ரூபா 303,310 ற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், இந்த | வித்தியாசங்களை இனங் கண்டு அவற்றிற்கு தேவையான சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக உள்ளவாறான வருமானம் ரூபா 432,271,585 ஆகும். எனினும், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தவறுதலாக அது ரூபா 432,574,895 தொகை என குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | வித்தியாசத்திற்காக விளக்கமளிப்பதற்கு திணைக்களத்திற்கு இயலாமல் இருந்தது. | | |
| (ஆ) | திணைக்களத்தினால் வரைபடங்கள் மற்றும் இலக்கமுறை தரவு நாளதுவரை ஆக்குவதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாமையால் நாளாதுவரை ஆக்கப்படாத வரைபுகள் மற்றும் இலக்கமுறை தரவு விற்பனையின் மூலம் பொது மக்களுக்கு காணிகள் தொடர்பாக சரியான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், இதன் காரணமாக இவ் வரைபடங்கள் மற்றும் இலக்கமுறை தரவுகள் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு முடியாதிருந்தது. | பொதுமக்களுக்கு நாளதுவரை ஆக்கப்பட்ட நில தகவல்கள் வழங்க வேண்டியிருந்தல் மற்றும் வருமான வழிகளை அபிவருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தமை. | திணைக்களத்தின் வரைபுகள் விற்பனைகளை மேம்படுத்துவதற்காக ஊடகங்கள் மூலம் நிகழ்ச்சித் திட்டங்கள் சமர்ப்பிப்பதற்கு அல்லது செய்தித்தாள்கள் தொலைக்காட்சி அறிவித்தல்கள் வெளியிடுவதற்கு தனியாக நிதி ஏற்பாடுகள் ஏதும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இந்த திணைக்கள இணைய தளத்தில் அனைத்து வரைபுகள் மற்றும் புதிய வழங்கல் அனைத்தும் பிரசுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் விலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. |

**2.3 செலவுகள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 22 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 20.02 மில்லியனிற்கான சேமித்தல் மற்றும் 17 மூலதன செலவு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 140.27 மில்லியன் தொகை சேமிப்பு காணப்பட்டது. | நி.பி. 50 இன் பிரகாரம் சரியாக செலவுகள் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | திறைசேரியினால் போதியளவு கட்டுநிதிகள் வழங்கப்படாமை இந்த சேமிப்புகளுக்கு காரணமாக இருந்தது என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மூன்று செலவு விடயங்களுக்காக வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 68.5 மில்லியனிற்கான குறைநிரப்பு ஏற்பாடுகளில் இருந்து ரூபா 55.58 மில்லியனிற்கான தொகையொன்று, அதாவது 81 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 288-02-02-1401 செலவு விடயத்திற்கு வழங்கியிருந்த ரூபா 2 மில்லியன் தொகை மொத்த குறைநிரப்பு ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகள் மதிப்பீடு ஒதுக்கப்பட்ட காரணத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்து தெரிவிக்கப்படவிலை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 09 செலவு விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 65.10 மில்லியனிற்கான ஏற்பாடுகள் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்ததுடன், இவ்வாறு மாற்றப்பட்டிருந்த ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 33.74 மில்லியன் ஏற்பாடுகள் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது. இந்த மாற்றப்பட்ட ஏற்பாடுகளில் சேமிப்பு 27 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன், 288-02-02-1301 செலவு விடயங்களுக்கு இவ்வாறு மாற்றப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | வேறு செலவு விடயங்களுக்கு ஏற்பாடுகள் மாற்றப்பட்டால் மாற்றப்பட்ட குறிக்கோளுக்கே ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். | -மேற்படி- |
| (ஈ) | 288-02-02-2104 (கட்டடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள்) செலவு விடயத்திற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், நி.பி. 66 மாற்றுப்பத்திரத்தின் மூலம் ரூபா 50 மில்லியன் தொகை வேறொரு மூலதன செலவு விடயத்திலிருந்து மாற்றப்பட்டிருந்தது. அவ்வாறு மாற்றப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 25.21 மில்லியன் எனப்படும் 50 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | வேறு செலவு விடயங்களுக்கு ஏற்பாடுகள் மாற்றப்பட்டால் மாற்றப்பட்ட குறிக்கோளுக்கே ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். | -மேற்படி- |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்

---

திணைக்களத்தினால் ஆண்டின் போது அணுகியிருந்த 08 செலவு விடயங்களில் ரூபா 1,102,323 ற்கான பொறுப்புக்கள், நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

## 2.5 வைப்பு மீதிகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-4) வைப்புக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 11,141,292 தொகையாக இருந்ததுடன், திறைசேரி கணினி அச்சுக் குறிப்பின் படி அத்திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 11,049,223 தொகையாக | வித்தியாசங்களை இனங் கண்டு அதற்கு தேவையான சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2015 ஆண்டின் 6000-0000-00-0015-0143 இலக்கங் கொண்ட பொது வைப்புக் கணக்கை சூனியப் படுத்தி மூடப்பட்டிருந்த போதிலும், சில பிராந்தி அலுவலங்களினால் அக்கணக்குகளை சூனியப்படுத்தியிருக்காததுடன், |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டமையால் ரூபா 47,069 ற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. இந்த வித்தியாசத்திற்கான விளக்கம் அளிப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாமலிருந்தது. | | அதன் காரணத்தினால் திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்கள ஏடுகள் இடையே, இந்த வித்தியாசம் காணப்பட்டது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொது வைப்பு பேரேட்டுக் கணக்கு தொடர்பாக வைப்புக் காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்படும் போது 05 – 07 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா 81,204 தொகையும், 02 – 04 இடைப்பட்ட வருடங்கள் ரூபா 2,814,214 தொகையுமாக நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த வைப்பு மீதிகள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது. இவற்றை தீர்ப்பதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் செயற்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மீதிகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கின்றேன். |

**2.6 அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் / ஊழியர்களிடம் அறவீடுகள் தாமதப்படுத்தியுள்ள கூட்டுத்தொகை ரூபா 5,908,230 ற்கான கடன் மீதியில் ரூபா 3,075,874 தொகை அதாவது, 52 சதவீதம் 5 வருடங்களை மிகைத்துள்ள கடன்மீதிகளாகும் என அவதானிக்கப்பட்டுள்ளதுடன், சில கடன்மீதிகள் 40 வருடங்களை மிகைத்திருந்த மீதிகள் எனவும் அவதானிக்கப்பட்டது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் இந்த ஆண்டிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.**

| 2018 ஆண்டு பந்தியுடன் தொடர்பு | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 3.1 | காணித் தகவல்களை வழங்குவதில் சதா முன்னோடியாக இருத்தல் திணைக்களத்தின் தூர நோக்காக இருந்ததுடன், பண்புசார் நில தகவல்கள் வழங்குதல் முக்கிய சேவையாகும். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மிகையான காலத்தில் போது இலங்கை நிலப் பகுதியில் ஏற்பட்டிருந்த மாற்றங்களை நாளதுவரை ஆக்கி வரைபடங்களை வெளியிடுதல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை தேசிய வரை படக் கோவை 2008 ஆண்டின் பின்னர் நாளதுவரை ஆக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் தூர நோக்கு மற்றும் சேவைகளுக்கு இணங்க நடைமுறை சாத்தியமாக செயற்பட வேண்டியிருந்தது. |
| 3.6(அ) | தியதலாவ அளவை மற்றும் வரைபுகள் தயாரிக்கும் நிறுவனத்தின் 8 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் மற்றும் ஊவா மாகாண நில அளவையாளர் நாயகத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | ஆதனங்களை பாதுகாப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 3.6(ஆ) | பிம்சவிய ஏற்பாடுகளின் மூலம் ரூபா 312 மில்லியன் ஏற்பாடுகள் செலவிடப்பட்டு கொள்வனவுகள் செய்திருந்த அளவை உபகரணங்கள் உட்பட பல்வேறு மூலதனச் சொத்துக்கள் மற்றும் ரூபா 82 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் காணி அமைச்சிலிருந்து உரித்தாக்கப்படாமல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்தும் போது அவற்றை பராமரித்தல் மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கான செலவு விடயம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டி நேரிடுவதனால் அந்த கொடுக்கல் வாங்கல்களின் சட்டரீதியான தன்மைக்காக அச் சொத்துக்களை முறைப்பிரகாரம் உரித்தாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 3.7 | 01 வருடம் முதல் 30 வருடங்களுக்கு மிகையான காலவீச்சில் 49 சந்தர்ப்பங்களில் வாகனங்கள் அளவை உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகிய சொத்துக்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 6.8 மில்லியன் தொகைக்கான நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நி.பி. 103 படி நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு வேண்டியிருந்தது. |
| 3.8(ஆ) | திணைக்களத்தின் நில அளவையாளர் ஒருவரினால் ஒரு மாதத்தில் அளவை செய்ய வேண்டிய காணித்துண்டுகளின் குறைந்த அளவு எண்ணிக்கை (Norms) 20 தொகை என 36 வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த நியமம் அளவை தொழில்நுட்ப முறை மற்றும் உபகரணங்களின் தொழிநுட்ப முன்னேற்றங்களுடன் தற்போதைக்கு பொருந்தக்கூடிய விதமாக மீளாய்வு செய்திருக்கவில்லை. | அளவை தொழில்நுட்ப முறை மற்றும் உபகரணங்களின் தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் தற்போதைக்கு பொருந்தக்கூடிய முறையில் ஒரு மாதத்திற்கு அளவை செய்யக்கூடிய குறைந்த காணித் துண்டுகளின் எண்ணிக்கையை தாமதம் இன்றி மீளாய்வு செய்ய வேண்டும். |
| 3.8(இ) | ரூபா 9,622 மில்லியன் தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 327 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரண இருப்பினை பெறுமதி மதிப்பீடு செய்யும் போது திறன்தொழில் பெறுமதி மதிப்பீட்டாளரின் சேவையை பெற்றிருக்கவில்லை. | சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் போது அரசாங்க திறன்தொழில் மதிப்பீட்டாளரின் சேவையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| 3.8(உ) | 2002 இன் 17 இலக்க அளவைச் சட்டத்தின் பந்தி 8 படி நில அளவையாளர் நாயகத்தினால் முழு இலங்கையையும் படிப்படியாக உள்ளடக்கக் கூடிய விதமாக இலக்கமுறை அல்லது வேறு முறையில் பூகோலத் தர அடிப்படை ஒன்றில் மற்றும் கடஸ்டர் தர அடிப்படை பேணி வருவதற்கு பூகோல தகவல்கள் முறைமை ஒன்று உட்படுத்தப்பட்டிருந்த 20,760 சதுர கிலோமீற்றர்களுக்கான தரவுகள் 1982 – 2007 இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த பழைய தரவுகள் என்பதனால் அதன் மூலம் பொது மக்களுக்கு நாளதுவரையான தரவுகளை பெற்றுக்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் தவிர்ப்பு செய்யப்பட்டிருந்தது. | நாளதுவரையான தரவுகள் மற்றும் தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 திகதிய 402 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயாலற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020 ஜூன் 30 திகதியளவிலும் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தின் கொள்வனவு செய்தவற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 41 மில்லியன் தொகை பெறுமதியான 41 வகையான பண்டங்களில் 435 பண்ட விடயங்கள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருக்காததுடன், பெறுகை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்காத ரூபா 38 மில்லியன் பெறுமதியான 21 பண்டங்களில் 928 பண்ட விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். | கடமைத் தேவையின் நிமித்தம் அவ்வப்போது கோரிக்கைகளை கவனம் செலுத்தி காணப்படும் பெறுகை எண்ணிக்கை போதியளவானதாக என கவனம் செலுத்தி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டின் போது அடிக்கடி இடைக்கிடை ஒதுக்கப்பட்டதனால் பெறுகை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்களை திருத்தம் செய்து கொள்வனவு செய்ய நேரிட்டிருந்தது. |
| (ஆ) | ரூபா 54 மில்லியன் செலவிடப்பட்டு மொத்த நிலைய உபகரணம் 56 கொள்வனவு செய்ய வேண்டிய போது கொள்வனவு செய்யும் எண்ணிக்கை உரிய முறையில் திட்டமிடப்படாமையால் முதலாம் முறை அழைக்கப்பட்ட கூறுவிலைகளை இரத்துச் செய்ய நேரிட்டிருந்தது. தேசிய பெறுகை | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 பிரிவின் படி குறிப்பிட்ட உற்பத்தியாளர் ஒருவரின் உற்பத்தி பொருளுக்கு வரையறுக்கக்கூடிய விதமாக விபரங்களை | தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய உபகரணங்களை கொள்வனவு செய்யும் எதிர்பார்ப்புடன், முதல் அழைக்கப்பட்ட கூறுவிலைகள் இரத்துச் செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | முறையின் மீது இரண்டாம் தடவை அழைக்கப்பட்ட கூறுவிலையின் மீது கொள்வனவு செய்த போது ஒரு போட்டியாளருக்கு மாத்திரம் கூறுவிலைகள் சமர்பிக்கக்கூடிய விதமாக விவரக்குறிப்புப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்ததனால் வெற்றிகரமாக போட்டிக்கு முன்வந்திருக்கவில்லை. | அடக்கி விவரக்குறிப்புப் பதிவேடு தயாரிக்கப்படக்கூடாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், அந்த வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். | |
| (இ) | ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டு 46 மடி கணினிகள் கொள்வனவு செய்யும் போது விலைகூறல்தாரர்களுக்கு விலைகூறல் சமர்ப்பிப்பதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 12 மில்லியன் செலவிடப்பட்டு 100 மடிக் கணினிகள் கொள்வனவு செய்யும் போது மற்றும் ரூபா 488,750 தொகை செலவிடப்பட்டு பாதுகாப்பு பாதணிகள் 500 கொள்வனவு செய்யும் போது விலைகூறல் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியின் பின்னர் விலைகூறல்களை திறப்பதற்கு 12 நாட்கள் தாமதம் ஏற்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 பிரிவின் படி போதியளவு கால அவகாசம் வழங்க வேண்டியிருந்தது. மற்றும் பெறுகை வழிகாட்டலின் 6.3.3(ஆ) படி விலைகூறல் மூடப்பட்டதுடன், கூடிய விரைவில் விலைகூறல்கள் திறக்க வேண்டும். | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் துணைக்கருவிகள் கொள்வனவு செய்தல் ஒரு வரையறுக்கப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால் 7 நாட்களாகிய குறைந்த காலத்துக்குள் விலைகூறல்கள் சமர்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்க நேரிட்டது என அறிவிக்கின்றேன். 2021 ஆண்டு முதல் தாமதம் இன்றி விலைகூறல்களை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டு 42 நிழல் பிரதி இயந்திரங்கள் கொள்வனவு செய்யும் போது கூறுவிலைகள் அழைப்புப் பதிவேடு(விலைகூறல் பதிவேடு) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாதிரிப் பரிசோதனை (Demostration) மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான அறிக்கைகள் பேணப்பட்டிருக்கவில்லை. விலைகூறல் திறப்பதற்கான விஷேட காரணங்கள் இன்றி விலைகூறல்களின் இரண்டு பிரதிகளும்(முதல் பிரதி, துணைப் பிரதி) திறக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல்களை கடைபிடித்து அரசுக்கு மிகவும் அனுகூலங்கள் பெறக்கூடிய முறையில் வெளிப்படைத் தன்மையுடன் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு விவரக் குறிப்புக்கள் பரிசோதனை செய்யப்பட்டதுடன், அவை சரியாக காணப்பட்டது. அறிக்கைகள் தயாரிக்கும் போது அது தொடர்பாக உட்படுத்துவதற்கு முடியாமல் போனதுடன், விலைக்கூறல்களின் துணைப் பிரதி தவறுதலாக திறக்கப்பட்டிருந்தன. |
| (உ) | விலை நிர்ணயிக்கும் முறையை கடைபிடித்து மொனறாகல மாவட்ட நில அளவை அலுவலகத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 3 மில்லியனிற்கான வழங்கல்கள் மற்றும் சேவையை பெற்றுக்கொள்ளும் போது வழங்குனர்களை தெரிவு செய்தல், | வழங்கல் மற்றும் சேவையை பெற்றுக்கொள்ளும் போது அரச பெறுகை வழிகாட்டல்களை கடைபிடிக்கப்பட வேண்டும். | மொனறாகல பகுதியில் போதியளவு வழங்குனர்கள் காணப்படாமை இந்த நிலைமை காரணமாக இருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | விலைகூறல் பதிவேடு தயாரித்தல், கூறுவிலை அழைத்தல் மற்றும் விலைகூறல் திறத்தல் என்பன அரச பெறுகை வழிகாட்டல்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2006 ஜனவரி 25 திகதிய 08 இலக்க தேசிய பெறுகை முகவராண்மைச் சுற்றறிக்கையின் 1.2 வழிகாட்டலின் மூலம் அரசாங்கம் எதிர்பார்த்திருந்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு தடங்கள் ஒன்று ஏற்பட்டிருந்தது. | | |
| (ஊ) | நுவரெலிய நில அளவை அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் தாள்விரங்கும் ஆபத்து நிலைமை ஏற்பட்டுள்ளதென தேசிய கட்டட ஆய்வு அமைப்பின் பரிந்துரைகளை கவனத்திற்கு எடுக்காமல் ரூபா 447,555 தொகை செலவிடப்பட்டு கட்டடத்தின் சிவிலின் மற்றும் தரையோடு பதித்தல் உட்பட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத் திருத்த வேலைகளின் பின்னர் கட்டடத்தின் அனைத்து சுவர்கள் மற்றும் அடித்தளத்தின் சில பகுதிகள் பாரிய வெடிப்படைதலுக்கு உள்ளாகி காணப்பட்டதுடன், வதிவதற்கு பாதுகாப்பற்ற நிலையில் இருந்தது. | தாள்விரங்கும் ஆபத்து ஏற்பட்டுள்ள நிலைமையின் மீது நவீனமயப்படுத்தல் மேற்கொள்வதற்கு முன்னர் கட்டட ஆய்வு அமைப்பின் அறிவுரை மற்றும் வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ள வேண்டும். | சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் நிர்மாணிப்பதற்கு வேறு இடமொன்று காணப்படாமையினாலும், விரைவாக இந்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததாலும் குறிப்பிட்ட திருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், கடுமான சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி புதிய உத்தியோகபூர்வ வாசஸ்தளம் ஒன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (எ) | புத்தளம் மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தின் பிரதான கட்டடத்தின் ஒரு பகுதிக்கு தரையோடு பதித்தல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ வாசஸ்தள திருத்த வேலைக்கான செலவிடப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1.29 மில்லியன் செலவு மீளாய்வாண்டின் பெறுகை திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த வேலைகள் உடன்படிக்கைகளில் சாட்சியாளர்கள் கையொப்பமிட்டிருக்காததுடன், ஒப்பந்த வேலையின் பெறுமதியும் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், அலுவலக கட்டடத்தின் தரையோடு | பெறுகைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட வேண்டியிருந்தது மற்றும் உடன்படிக்கைகளின் சட்டரீதியான தன்மை போலவே நிர்மாண வேலை மதிப்பீடுகள் கூடியளவு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். | புதிய நிர்மாண வேலைகள் மாத்திரம் பெறுகை திட்டத்தில் உட்படுத்தப்படுகின்றது. இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோத்தர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தள திருத்த வேலைகளின் போது அவசர தவிர்க்க முடியாத திருத்த |

| | | |
|---|---|---|
| பதிக்கும் ஒப்பந்த வேலையின் உடன்படிக்கை, ஒப்பந்த வேலையின் பெயரும் பிழையாக உட்படுத்தப்பட்டிருந்தது. இது சரச்சைக்குரிய தன்மையுடைய விடயம் ஒன்றென அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 448,325 ற்கான செலவில் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் திருத்த வேலையின் போது ரூபா 108,140 ற்கான செலவில் மேற்கொள்ளப்படவேண்டியிருந்த நிர்மாண வேலை விடயமொன்று நிறைவேற்றப்பட்டிருக்காதுடன், ரூபா 148,287 ற்கான செலவில் அங்கீகாரம் இன்றிய 12 மேலதிக வேலைப் பகுதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | வேலைகள் மேற்கொள்வதற்கு நேரிட்டமையால் திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுக்கு மேலதிகமாக செயற்படுவதற்கு நேரிட்டிருந்தது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| விளைவற்ற சொத்துக்கள் | | |
| மீளாய்வாண்டின் போது ரூபா 70.11 மில்லியன் பெறுமதியான காணிகள் மற்றும் கட்டடங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | 2003 ஜனவரி 03 திகதிய 353(5) இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1989 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 29 ஆண்டுக்கு அண்மித்த காலப் பகுதியில் திணைக்களத்தின் அளவை உபகரணங்கள் கட்டடங்கள் போன்ற சொத்துக்கள் 21 வகையானவைக்கு ஏற்பட்டிருந்த ரூபா 2,544,758 ற்கான நட்டங்கள் மற்றும் சேதங்கள் மற்றும் 1998 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை 28 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 4,251,626 ற்கான விபத்து சேதங்களை அறவீடு செய்வதற்கு அல்லது | நி.பி. 103 படி நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து வாகனங்களின் நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டின் போது கிடைத்திருந்த 14,709 அளவையிடும் கட்டளை தொகையுடன் 2009 ஆண்டு முதல் 2019 ஆண்டு இறுதி வரை திணைக்களத்தினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த அளவையிடும் கட்டளைகளின் எண்ணிக்கை 48,152 தொகை எனினும், அவற்றில் 27,113 தொகை அளவையிடும் கட்டளைகள் அதாவது 56 சதவீத எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாமல் இருந்தது. | நீதிமன்ற அளவையிடும் கட்டளைகள் உட்பட நிலுவையாக காணப்பட்ட அளவையிடும் கட்டளைகளின் எண்ணிக்கையை பூர்த்தி செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நில அளவைத் திணைக்களத்திற்கு ஒரு வருடத்தில் பல்வேறு நிறுவனங்களில் இருந்து பாரிய எண்ணிக்கையான அளவையிடும் விண்ணப்பங்கள் கிடைகின்றன. இந்த எண்ணிக்கையை நிறைவேற்றுவதற்காக அரச நில அளவையாளர்களுக்கு முடியாதுள்ளது. முதன்மை வழங்க வேண்டிய அளவையிடும் விண்ணப்பங்களை தெரிவு செய்து அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திணைக்களத்தின் நிலையியல் கட்டளை இலக்கம் 7.4.3 மற்றும் 7.15 கீழ் நில அளவையாளர்களின் கடமை அலுவல்களை ஒழுங்குபடுத்துவதற்காக பிராந்திய அலுவலகங்களில் ஒவ்வொரு நில அளவையாளராளும் பேணப்பட வேண்டிய நாட்குறிப்பு மொனறாகல, திஸ்ஸ மஹாராம மற்றும் நுவரெலிய ஆகிய பிராந்திய நில அளவையாளர் அலுவலகங்களில் நாளதுவரை பேணப்பட்டிருக்காமை கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக இந்த உத்தியோகததரின் கடமைகள் உரிய முறையில் மேற்பார்வை செய்யப்பட்டவில்லை என அவதானிக்கப்பட்டது. | நில அளவையாளர்களின் கடமைகளை நிருவகிப்பதற்காக திணைக்களத்தினால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்கள் விதிகள் மற்றும் உடன்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | தி.க. 7.4.3 மற்றும் தி.க. 7.15 மேற்கொள்ளப்பட வேண்டிய அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்வதற்கும் நில அளவையாளர்களின் நாட்குறிப்பு முறைப்பிரகாரம் பதிவு செய்வதற்கும் அனைத்து நில அளவை அத்தியட்சகர்கள் ஊடாக நில அளவையாளர்கள் அறிவுறுவத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது திஸ்ஸ மஹாராம பிராந்திய நில அளவை அலுவலகத்தின் நில அளவையாளர்களுக்கு முன்மாணி உட்பட அளவை உபகரணங்கள் வழங்கும் போது மற்றும் திருப்பிப் பெறும் போது உரிய முறையில் ஏடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அரச சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த குறைபாடுகள் தற்போது சரி செய்யப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது திஸ்ஸ மஹாராம பிராந்திய அலுவலகத்தை நடாத்துவதற்காக மாதாந்தம் ரூபா 25,000 வீதம் தனியார் வீடொன்று வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், வாடகை ஒப்பந்தம் இரண்டு தரப்பினருக்கும் கையொப்பமிடுவதற்கு 03 மாதங்கள் தாமதமாகியிருந்தது. மேலும், இந்த கட்டடத்தின் மேல் மாடியில் உரிமையாளர் வசித்து வந்ததனால் பாதுகாப்பற்ற நிலைமை காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | உடன்படிக்கைகளின் சட்டரீதியான தன்மை தொடர்பாகவும் திணைக்களத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்காகவும் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். | இந்த கட்டடம் தனியார் வதிவிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாக காணப்பட்டதால் அலுவலக முறைமையில் சிக்கல் ஏற்படுவது உண்மையாகும். எதிர்காலத்தில் தாமதம் இன்றி வாடகை உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆண்டு புதிய அலுவலக் கட்டடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| (உ) | 2018 ஆண்டு 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் உரிய பிரிவுகளின் படி செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்து தெரிவித்திருக்கவில்லை. |

## 4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் 5,639 உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்காக நடைமுறை ஆண்டின் போது பயிற்சியொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்சிகள் மூலம் திணைக்களத்தின் செயலாற்றலை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக தேவையான ஏற்பாடுகள் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது பதவியணியினரின் இயலுமை அபிவிருத்தி (பயிற்சி பாடநெறி)க்காக ரூபா 9.26 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 3.41 மில்லியன் செலவிடப்பட்டு 431 உத்தியோத்தர் / ஊழியர்களுக்கு மாத்திரம் பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டிருந்தது. | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தி ஊழியர்களின் இயலுமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் பதில் அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (இ) | சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலை 204 வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காததுடன், இந்த நிலைமையும் திணைக்களத்தின் செயலாற்றலை அபிவிருத்தி செய்வதற்காக பாதகம் ஒன்றாகியிருந்தது. | அத்தியவசிய பதவிகளுக்காக பதவியணியினர் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஈ) | தொழில்நுட்ப மற்றும் நிருவாக உத்தியோகத்தர்களினால் வரைபு தொழில்நுட்ப உத்தியோத்தர்கள் மேற்பார்வை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் நில அளவையாளர் சேவை உத்தியோத்தர்களினால் 61 வரைவு தொழில்நுட்ப உத்தியோத்தர்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மற்றும் நிருவாக உத்தியோகத்தர்களினால் திரைப்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்ய வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கருத்து தெரிவிக்கப்படவில்லை. |